RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21427

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

சங்க இலக்கியங்கள் காட்டும் வீர மங்கையர்

கே. ஹேமலதா

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்- 636011, தமிழ்நாடு, இந்தியா

Sangam literature showing about Veera Mangaiyar

K. Hemalatha [a,*]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem-636011, Tamil Nadu, India.

* Corresponding Author:
khemalathamaha@gmail.com

Received: 14-09-2021
Revised: 19-10-2021
Accepted: 22-10-2021
Published: 30-10-2021

ABSTRACT

Since ancient times, the Tamil community has given great value to women. It is said that in the Vedic period men had equal rights with women and husband and wife had equal rights in religious and social duties. The position of women during the Sangam period, similar to the Vedic period, was highly admirable. Women were considered to be of the highest character to household duties. Chastity is with loving virtues patience, morality, maintaining the heart, hospitality, circumference, etc., are the characteristics of the wife. The women of the sangam age considered Nanam better than the best life of all, that innocent chastity was better than that Nanam, and that their husband was life for wives. Women have maintained a good place of Nanam and chastity. She considered it is duty to give birth to the people and to be heroic. The purpose of this article is to express the heroic feelings of women in sangam literature.

Keywords: Sangam literature, Women's status, Women's bravery, Heroic women, Veera Mangaiyar

ஆசிரியர் குறிப்பு

முனைவர் கே. ஹேமலதா அவர்கள், பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்த்துறையில், உதவிப்பேராசிரியராகப் பணிபுரிகின்றார். பல்வேறு பன்னாட்டு, தேசிய கருத்தரங்குகளில் கட்டுரை வாசித்தளித்துள்ளார். 11 பன்னாட்டு கருத்தரங்கக் கட்டுரைகளும், 7 தேசிய கருத்தரங்கக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளது. பன்னாட்டு ஆய்விதழ்களில் 6 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. 18 கருத்தரங்குகள், பயிலரங்குகளில் பங்கு பெற்றுள்ளார். இவர் நெறியாளராக இருந்து 14 ஆய்வியல் நிறைஞர் மாணவிகளை உருவாக்கியுள்ளார்.

முன்னுரை

முதிர்ந்த தமிழ்ச்சொற்கள், அளவான கற்பனை, எத்தகைய நுட்பமான உணர்வையும் கவிதையாக்கும் கலைத்திறன், மிகைபடாத வருணணை, உணர்ச்சிகளின் வெளிப்பாட்டிற்குச் சுற்றுப்புறச் சூழலைப் பயன்படுத்தும் ஆற்றல், புறத்தோற்றத்திற்கு முதன்மை தராமல் என்றும் மாறாமல் இருக்கும் உள்ளத்து உணர்ச்சிகளைப் பாடுவதில் ஆர்வம், உள்ளம் கலந்த உயர்ந்த உண்மைகளையும்

உன்னதமான உணர்வுகளையும் நிலையாக வாழவைப்பதில் காட்டிய நாட்டம் ஆகியவை சங்க இலக்கியத்தின் இயல்புகள் எனலாம்.

சங்க இலக்கியம் அகம், புறம் என்னும் இருபெரும் பகுப்புடையதாகும். பண்டைய தமிழரின் காதல், வீரம் என்னும் பேருணர்வுகளின் அடிப்படையிலேயே இப்பாகுபாடு அமைந்துள்ளது காதலைத் தவிர ஏனையவை அனைத்தும் புறத்திணையுள் அடங்கும். புறத்தில் போரும், போருக்கு அடிப்படையான வீரமும் சிறப்பிடம் பெறுகிறது. உலகில் பூசலும், போரும், போராட்டங்களும் புதியனவல்ல. புல்லினம் முதல் மக்களினம் முடிய உள்ள உயிரினங்கள் அனைத்திலும் போரும் போராட்டங்களும் நடந்தவண்ணம் உள்ளன. புல்லினம் போன்றவற்றிற்கு இன வளர்ச்சிக்காகவும், இனப் பெருக்கத்திற்காகவும், போராட்டங்கள் நடைபெறுகின்றன. மக்களிடையே உணவு, உடை, உறையுள், மண், பெண், பொன், புகழ் வேட்கைகள் பற்றியே போராட்டங்கள் நடைபெறுகின்றன. இதனை அகப் புறப் போராட்டங்கள் எனலாம்.

உயிரினங்களிடையே இடையறாமல் இருந்து வரும் இவ் வாழ்க்கைப் போராட்டங்கள் அவற்றினிடையே உள்ள அடிப்படை உணர்வான போர்ப் பண்பின் விளைவு எனலாம். போர்க்குணம் என்பது மக்கள் மனத்தின் இயல்புகளும் ஒன்று. வாய்ப்புக்கும், வலிமைக்கும் ஏற்ப இந்தக் குணம் பல்வேறு வடிவில் வெளிப்படுகிறது. ஒருவரை ஒருவர் தாக்குதலும் அதனால் அழிவதும் புதியனவல்ல. அது இவ்வுலகத்து இயற்கை என்று புறநானூறும் கூறுகிறது.

அகம், புறம் பற்றிய சங்க இலக்கியங்களில் உலகியல் முறைகள் கூறப்பட்டுள்ளன. புறம் பற்றிய இலக்கியங்கள் ஏனைய உலகியல் நெறிகளோடு போர் பற்றியும் எடுத்துரைக்கின்றன. இலக்கியம் குறிக்கின்ற போர்கள் பெரும்பாலும் 'நல்லமர்' என்றே குறிக்கப்படுகின்றன. மேலும் இப்போர்கள் அறம் நிறைந்த மறப்போர் என்றும் 'அறம் பற்றுக்கோடான நல்லமர்' என்றும் குறிப்பிடப்படுகின்றன. அக்காலத்தில் வாழ்ந்த தமிழர் இயற்கையாகவே மறப் பண்பு படைத்தவராக விளங்கினர். அவருடைய பழக்க வழக்கம், தொழில், விளையாட்டு போன்றன யாவும் போர்ப் பண்புடன் விளங்கியிருத்தலைக் காணலாம்.

இதனால் வீரர்களது மறப்பண்பைக் காட்டும் இவ்வறப்போர் அறத்தைக் காப்பதற்காக என்பதும் அச்செயலுண்மையைத் தன் உயர்ந்த உள்ளம் உணர்த்துமாறு உலகறிய உரைத்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள் என்பதும் புலப்படுகின்றது. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் மகளிரின் வீர உணர்வை பற்றி விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் பெண்களின் நிலை

சங்ககாலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் வாழ்ந்து சிறந்த கவிதைகள் இயற்றியிருப்பது அக்காலக் கல்வியின் முதிர்ச்சியினையும், பெண்ணின் பெருமையினையும் காட்டுகிறது. ஔவையார், அள்ளூர் நன்முல்லையார், காக்கைப் பாடினியார், நக்கண்ணையார், வெள்ளி வீதியார், மாறோகத்து நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், குறமகள் இளவெயினி, பூங்கணுத்திரையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தி, பெருங்கோப்பெண்டு, பாரி மகளிர் அங்கவை, சங்கவை முதலியோர் எடுத்துக்காட்டாக கூறத்தக்கவர்கள். சங்கப்புலவர்களில் ஆண்பாற் புலவர்களேயன்றி பெண்பாற் புலவர்களும் கல்வி கற்று புலமையுடன் விளங்கினர் என்பதை அவர்கள் பாடியுள்ள பாக்களால் அறிய முடிகிறது.

வீரத்திருமணம்

சங்க காலத்தில் மகளிர் நிலை குறித்து அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளன, மகளிரின் வீரம் குறித்து பல்வேறு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கற்பு பெண்களின் தலையாய விழுமியமாகப் போற்றப்பட்டது. காதல் திருமணம் சாதாரணமாக வழக்கத்திலிருந்தது. பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்யும் உரிமையைப்

பெற்றிருந்தனர். இருப்பினும் வீரத்தில் சிறந்த ஆடவனையே தன் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்தனர் (படம் 1. பார்க்க).

படம் 1: ஏறு தழுவுதல்.

"கொல் லேற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்

புல்லாளே ஆயமகள்" (கலித்தொகை 103:63-64)

என்ற முல்லைக்கலி பாடல் வரிகளின் மூலம் கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை ஆயமகள் மறுபிறப்பினும் விரும்பமாட்டாள் என்ற செய்தி புலப்படுகின்றது (Balasubramanian, 2004).

பொருளுக்காக ஆடவர் பிரிதல் அவசியம்

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்கிறது திருக்குறள். தமிழ் நூல் யாவும் செல்வத்தை திரட்ட வேண்டும் என்ற தான் சொல்கிறதே தவிர செல்வம் தேட வேண்டாம் என்று கூறவில்லை.

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகளின் அருகில் சென்று தன் பக்கம் முகத்தைத் திருப்புமாறு வேண்டுகிறாள். முகத்தைத் திருப்பியதும் தலைவனுடைய பிரிவுக்கு உடன்படுதல் மனைவியின் கடன் என உணர்த்தி தோழி தலைவியை சம்மதிக்க வைக்கிறாள்.

"பெருநகை கேளாய் தோழி!

ஒரு நாள் கழியினும் உயிர்வேறு படூஉம்

வாழ்த்தும் என்ப நாமே" (நற்றிணை 129)

சங்க கால மகளிர் இன்பக் கருவிகளாக இருக்கவில்லை. பிரிவால் பெரிதும் வருந்தி துயர் அடைந்தாலும் தலைவன் தன் கடைமையை ஆற்றச்செல்லும் போது முழுதும் தடுப்பதில்லை. வருந்தி தலைவனை அனுப்பிவைத்தாலும் வாழ்த்திக்கொண்டு இருத்தலே சங்கப் பெண்களின் சால்பாகும் (Balasubramaniyam, 2011).

அகநானூற்றில் இடம் பெற்றுள்ள தலைவிமார்களில் பலர் தலைவன் கடமைக்கு செல்லவேண்டிய நாள் எல்லாம் இருந்து வினைமுடித்து பொருள் சேர்த்து நோயின்றி நலமாகத் திரும்பி வர வேண்டுமென்று நாளும் வாழ்த்துகின்றனர்.

"என் ஆய்நலம் தொலையினும் தொலைக வென்று

நோயில ராகநங் காதலர்" (அகநானூறு 115)

என்று சங்ககால மகளிர் பிரிவுக்கு ஒத்துழைத்தனர் என்பதை அறியமுடிகிறது (Balasubramaniyam, 2004).

நெஞ்சை வடுப்படுத்திக் கொள்ளுதல் அறிவுக்குப் பொருந்தாது

தலைவன் தான் வருவதாகக் குறித்த காலம் கழிந்தும் அவன் வரவில்லை. அதனால் தலைவிக்கு என்ன ஆகுமோ என்று தோழி வருந்துகிறாள். அதனைக் கண்டு தலைவி தான் அவர் வரும் வரை துயர் பொறுத்து இருப்பதாகக் கூறுகின்றாள் என்கிறது நற்றிணைச் செய்யுள்.

"நின் குறிப்பு எவனே? தோழி! - என் குறிப்பு

என்னோடு நிலையா தாயினும் என்றும்

நெஞ்சு வடுப்படுத்திக் கெடவறி யாதே" (நற்றிணை 357)

என்கிறாள் தலைவி (Balasubramaniyam, 2011). சாரல் நாடனோடு மகிழ்ந்து சுனையாடி இன்புற்ற அந்த நினைவை என் நெஞ்சம் என்றும் மறப்பதில்லை. ஆதலினாலே அந்நினைவையே பற்றிக் கொண்டு அவர் வரும் வரை அவர் பற்றிய நினைவினாலும் நம்பிக்கையினாலும் உயிர் தரித்திருப்பேன் என்றும் கூறுகிறாள்.

தலைவியின் மன உறுதி அறிந்த தோழியும் தன் கவலையை மறந்தவளாக நிம்மதி பெறுகிறாள் என்கிறார் புலவர். ஆணாயிருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் மனம் வடுப்படுதல் கூடாது என்னும் அறக்கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

கணவனின் புகழ்

சங்ககாலப்புலவர்கள் ஒரு தலைவனை விளித்துப் பாடும்போது அவன் மனைவியின் சிறப்புக்களை அடைமொழிகளாக அமைத்துப் பாடியிருப்பது நோக்குதற்குரியது.

"செயிர் தீர் கற்பின் சேயிழை கணவ!" (புறம்3:6)

என்று புறநானூற்றில் இரும்பிடர்தலையார், பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதியை அவன் மனைவியின் கற்பின் சிறப்பைக் குறிப்பிட்டுப் பாடுகிறார் (Palanisamy, 1989). இவ்வாறே ஏனைய சங்கப் பாடல்கள் பலவற்றில் மனைவியின் சிறப்பியல்பு கணவனுக்கு அடைமொழிகளாக அமைந்துள்ளன. சான்றாக

"ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ" (பதிற்றுப்பத்து 14)

"மங்கையர் கணவ" (திருமுருகாற்றுப்படை 264)

"மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்" (மலைபடுகடாம்58)

என்பனவற்றைக் குறிப்பிடலாம் (Balasubramaniyam, 2004).

மனைவியின் சிறப்புப் பண்புகளை கணவனோடு சேர்த்துப் பாடுவதன் நோக்கம் கணவன் புகழை மேன்மையுறச் செய்வதேயாகும். புகழ்மிக்க மனைவி இல்லாத கணவனுக்கு பகைவர்முன் சிங்க ஏறுபோல் நடக்கும் பெருமிதநடை இல்லை என்ற திருவள்ளுவரின் கருத்து இங்கு நினைவு கூறத்தகுந்தது.

"புகழ்புரிந் தில்லிலார்க் கில்லை யிகழ்வார்முன்

ஏறுபோற் பீடு நடை"

என்ற குறள் இக்கருத்தை அரண் செய்வதாகும் (Puliyur Kesigan, 2012a).

அரசு அலுவல்களில் பெண்

சங்ககாலத்தில் பெண் புலவர்கள் பலர் அரசர்களுடன் அரசு அலுவல்களில் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளனர். போரைத் தவிர்க்க சமாதானம் பேச மாற்றரசர்கள் நாட்டிற்கு வீரத்துடன் சென்றுள்ளனர் (புறம்:87) (Palanisamy, 1989). மன்னர்களிடம் பரிசில் பெறச் சென்ற போது பரிசில்

தரத்தாமதமானதால் தன்மான உணர்வு மேலீட்டால் அப்பரிசிலே வேண்டாமென்று வீரத்துடன் மறுத்து உள்ளனர்.

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம்:206)

அதியமான் பரிசில் தராமல் நீடித்த பொழுது ஔவை பாடிய பாடல் இது. இது ஔவையாரின் தன்னுறுதியை நன்கு காட்டுவனவாகும்.

ஔவையார்

பெண்கள் காமம் மேலீட்டால் தங்களுடைய உள்ள உணர்வுகளை வெளிப்படையாய் பாடும் மரபு முற்காலத்தில் இல்லை ஆனால் ஔவை,

"முட்டுவேன்கொல் தாக்குவேன் கொல்?

ஓரேன், யானும்: ஓர் பெற்றி மேலிட்டு

'ஆஅ! ஒல்' எனக் கூவுவேன் கொல்? -

அலமரல் அசைவளி அலைப்ப என்

உயவு நோயறியாது, துஞ்சுமூர்க்கே." (குறுந்தொகை 28)

என்று பாடுகிறார் (Puliyur Kesigan, 2012b). காதல் வயப்பட்ட தலைவி தலைவன் உடனில்லாமல் இரவுப் பொழுதை கழிக்கிறாள். உறக்கமின்றித் தவிக்கிறாள். இரவுப்பொழுதில் ஊர் உறங்க தான் உறங்காத நிலையில் வாடும் தலைவியின் மனநிலையை ஔவை குறுந்தொகையில் பதிவு செய்துள்ளார்.

தமிழ் பெரும் புலவர்கள் வரிசையிலே ஔவையாருக்குச் சிறப்பான இடம் என்றும் உண்டு. இவர் பெண்பாற் புலவர்களிலே தலைமையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க கால ஔவையாரின் ஆளுமையின் விளைவே பிற்காலப் பல ஔவையாரின் தோற்றத்துக்கு மூலக் காரணமாகும். காதல், வீரம் என இருதுறைகளில் கருத்துக்களை உணர்த்துவதிலும் உணர்ச்சிக் கூறுகளின் நுண்மையைப் புலப்படுத்துவதிலும் சங்ககால ஔவையாரின் ஆற்றல் அளப்பரியது ஆகும். உணர்ச்சிகளில் வன்மை, மென்மைக் கூறுகளை திட்ப நுட்பமுடன் பாடுவதில் வல்லவர் ஆவார். சங்க கால ஔவையாருக்கு உலக இலக்கிய அரங்கில் முதல் வரிசையில் முதல் இடம் நல்க வேண்டும்.

வெள்ளி வீதியார்

ஔவையாருக்கு அடுத்தபடியாக வெள்ளிவீதியார். இவரது பாடல்களில் துன்ப உணர்ச்சி எதிரொலிக்கும். அவரது வாழ்க்கை அனுபவங்களே பாடல்களாக வெளிப்பட்டனவோ எனக் கருதும் வகையில் அவரது பாடல்கள் விளங்கும்

இடித்துரைக்கும் நண்பர்கள் இருந்தும் காமநோய் மிகுதியைத் தடுக்க முடியாத நிலையை கையில்லாத ஊமன் வெண்ணெய் வெயிலில் உருகுவதைக் கண்ணால் கண்டும் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருப்பதைக் குறிப்பிட்டு சொல்வதாக வெள்ளிவீதியார் பாடி உள்ளார்.

"இடிக்கும் கேளிர் நும் குறையாக...

கையில் ஊமன் கண்ணில்காக்கும்

வெண்ணெ யுணங்கல் போல..." (குறுந்தொகை58)

என்று வெள்ளிவீதியார் அழகான உவமையால் பாடிஉள்ளார் (Puliyur Kesigan, 2012b). உணர்விலே பூத்து, உணர்விலே காய்த்து, உணர்விலே கனியாவது தான் கவிதை என்றால் வெள்ளிவீதியாரின் கவிதைகள் பெண்மை உணர்விலே பிறந்து, பெண்மை உணர்விலே வளர்ந்து, பேருணர்விலே சங்கமமாகி நிற்பவை மகிழ்ந்து இன்புறுவதற்குரிய ஒன்றாகும்.

இவ்வாறு ஔவையும், வெள்ளிவீதியாரும் புரட்சிகரமாக அக்காலத்தில் பெண்களில் உள்ள உணர்வை தம்பாடல்கள் வாயிலாக பதிவிட்டுள்ளனர்.

கைம்மை நோன்பு

ஆண்களுக்கிடையில் நடைபெறும் போரில் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்கள் தான். கணவனை இழந்த பெண்களின் நிலை, அரசனை இழந்த நாட்டின் நிலை, தந்தையை இழந்த பெண்களின் நிலை போன்றவை கையறு நிலைகளாகும் இதில் பாரிமகளிர் தன் தந்தையை இழந்த நிலையில் வறுமையால் வாடுகிறார்கள்.

கணவன் இறந்த பின்பு பெண் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததைப் புறநானூற்றுப் பாடல்வழி அறிகிறோம். உடன்கட்டை ஏறாமல் கைம்மை எனும் நோன்பு கொண்டு வாழலாம் எனச் சமூகம் வரையறுத்து இருக்கின்றது. எனினும் பெருங்கோப்பெண்டு தன் கணவனான அரசன் இறந்த பின்னர் உடன்கட்டை ஏற முடிவு செய்கின்றாள். உடன் இருக்கும் சான்றோர் பல்வேறு அறிவுரை கூறியும் அரசாட்சியை ஏற்கக் கூறியும் அவற்றை எல்லாம் விடுத்து உடன்கட்டை ஏறுகிறாள். மன்னனின் மனைவியாக இருந்தும் தமிழ்ப்புலமை பெற்றிருந்தும் கூடக் கைம்மை நோன்பினை ஏற்க வேண்டுமே என்பதற்காக இறக்கத் துணிகின்ற நிலை சமுதாயச் சூழலால் நிகழ்ந்தது எனலாம்.

"பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பு அற

வள் இதழ் அவிழ்ந்த தாமரை

நள் இரும் பொய்கை தீயும் ஓரற்றே" (புறம் 246)

இவ்வாறு பெண்மனம் எண்ணத்தக்க அளவு சமூகம் பெண்ணின் மனத்தில் கற்பு எனும் கோட்பாட்டை ஆழமாகப் பதித்ததே காரணம் எனலாம் (Palanisamy, 1989). நீர்ச்சோற்றுத் திரட்சியோடு, எள்ளும், புளியும் சேர்த்துச் சமைக்கப்பட்டு அதனோடு வேளையிலையும் வேக வைத்து உணவாகக் கொண்டு, படுக்கப் பாய் இல்லாமல் கைம்மை நோன்பு நோற்ற வருந்தும் நிலையை விட இறத்தல் மேலானது என பெண் வருந்துகிறாள். தீப்புகுதல் என்பது தாமரைப் பொய்கையில் புகுவது போன்றது என்கிறாள். கணவன் இறந்த பின்பு பெண்ணின் சமூக இருப்பு புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவள் எதிர் கொள்ளும் சமூக அவலம் குறித்த பெருங்கோப்பெண்டுவின் கவிதை வரிகள் அக்கால சமூகச் சூழலை வெளிப்படுத்தும் சமூகப் பதிவுகள் ஆகும்.

மகளிரின் வீர உணர்வு

சங்ககால மகளிர் மிகவும் நாட்டுப் பற்றுடையவர்களாய் விளங்கினர். பகைவரிடமிருந்து தாய் நாட்டைக் காக்கத் தம் மக்கள், கணவர் ஆகியோரைத் தியாகம் செய்வதைப் பெருமையாகக் கருதினார்கள். இது அவர்களுடைய வீர உணர்வைப் புலப்படுத்துகிறது.

'போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடாத கொள்கையினை உடைய ஒரு வீரனுடைய தாய் தன் மகன் இறந்த திறத்தைக் காணப் போர்க்களம் சென்றாள். அங்கு எதிர்த்த பகைவர்களைக் கொன்று, முடிவில் உடல் வெட்டுண்டு வேறுபட்டுக் கிடந்த தன் மகனுடைய வீரச் சிறப்பை அவள் கண்டு, அப் பெருமிதத்தால் அவளுடைய வற்றிய மார்புகள் மீண்டும் பாலூறிச் சுரந்தன' (புறம். 295:5-9) என்று ஔவையார் பாடுகிறார் (Palanisamy, 1989).

தன் மகன் போரில் இறந்ததற்காக வருந்தாமல், நாட்டைக் காக்கத் தன் மகன் உயிர் கொடுத்ததற்காக அவள் எய்திய பெருமித உணர்வு இதனால் தெரிகிறது.

தாய் தன் மகனுக்கு பாலுடன் வீரத்தைச் சேர்த்துப் புகட்டியதால் அவன் வீரமரணம் அடைந்தான் என்னும் கருத்தையே இப்பாடல் கூறுகிறது. எனவே வீரத்தைப் புகட்டுவது தாயின் தலையாய செயல் என்பதை இப்பாடல் சான்று காட்டுகிறது.

வ யது முதிர்ந்த ஒரு தாயினுடைய மகன் போர்க்களத்திற்குச் சென்றிருந்தான். அவன், பகைவர் படைகண்டு அஞ்சி முதுகில் புண்பட்டு இறந்தான் என்று சிலர் அத் தாயிடம் கூறினர். இதைக் கேட்டவுடன் 'என் மகன் முதுகில் புண்பட்டு இறந்து கிடப்பானானால் அவன் வாய் வைத்து உண்ட என் மார்பை அறுத்தெறிவேன்' என்று அத்தாய் வஞ்சினங்கூறி போர்க்களத்திற்குச் சென்றாள். அங்கு, மார்பில் புண்பட்டுத் தன் மகன் இறந்து கிடப்பதைக் கண்டவுடன் அவனை பெற்றெடுத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும் மிகுதியான மகிழ்ச்சி அடைந்தாள் என்று காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடுகிறார். அரசியல் மேலாதிக்கம் காரணமாக நடைபெற்றபோரில் ஆண் தன் வீரத்தை வெளிப்படுத்தாமல் இருந்தால் அது அவனைப் பெற்ற தாய்க்கு இழுக்கு எனும் புது மதிப்பீட்டினைப் பதிவு செய்துள்ளார் காக்கைப் பாடினியார். ஆணின் வீரச் செயலுக்காக மகிழ்வதுதான் தாயின் இயல்பு என புது நெறி வகுத்துத் தந்துள்ளார்.

"படையழிந்து மாறின னென்றுபலர் கூற....

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" - புறம்.278:3-9.

நரைத்த கூந்தலையுடைய முதியோள் தன் மகன் போர்களத்தில் பகைவர் யானைகளைக் கொன்று தானும் விழுப்புண்ணுடன் இறந்தான் எனக் கேட்டதும் அவள் அவனைப் பெற்றெடுத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியினும் பேருவகை கொண்டாள் என்று பூங்கணுத்திரையாரின் புறப்பாடல் (புறம்.277) கூறுகிறது (Palanisamy, 1989).

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்

சான்றோனெனக் கேட்ட தாய்" (குறள் 69)

என்ற குறள் கருத்து இதற்கு ஒத்திருத்தலைக் காணலாம் (Puliyur Kesigan, 2012a). சங்க கால போர்ச் சூழலில் ஆண் குழந்தைகளைப் பெற்றுத் தருவது மட்டுமே பெண்ணின் கடமையாகப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள பெண் கவிஞர்களின் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. போர்க்களத்தில் மகன் இறந்தாலும் அதைக் குறித்து பெருமிதம் கொள்வது தான் வீரத்தாயின் சிறப்பாக இருந்திருக்கிறது. எனவே அவ்வீர உணர்வே வீரத்தின் அடையாளம் என்றும் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

பெண்ணொருத்தி ஒரு தாயிடம் சென்று வீட்டிலிருக்கும் தூணைப் பிடித்துக் கொண்டு "உன் மகன் எங்குள்ளான்?" என்று கேட்கிறாள். அத்தாய், "புலி தங்கி விட்டுச் சென்ற குகைபோல, பெற்றெடுத்த வயிறு இங்கே உள்ளது. ஆனால் அவன் போர்க் களத்தில்தான் காணப்படுவான். ஆதலால் அங்குச் சென்று காண்பாயாக" என்று கூறுகின்றாள் (புறம்.86) (Palanisamy, 1989).

முதல் நாள் போரில் ஒரு மறக்குடி மகளுடைய தந்தை, யானையைக் கொன்றதோடு, அவனும் வீழ்ந்து இறந்தான். இரண்டாம் நாள் போரில் ஆநிரைகளைக் கவர்ந்து செல்லாதவாறு பகைவர்களைத் தடுக்கும் போது அவளுடைய கணவன் இறந்தான். மூன்றாம் நாள், போருக்குரிய முரசு ஒலியைக் கேட்ட அம் மறக்குடி மகள் சிறிதும் வருந்தாது மகிழ்ச்சியுடன் தனக்கு ஆதரவாக இருந்த ஒரே மகனையும் கையில் வேலைக் கொடுத்துப் போருக்கு அனுப்பினாள்.

"மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை....

செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறம்.279:3-11)

ஒக்கூர் மாசாத்தியாரின் இப்பாடல் தாய் பற்றிய புதிய பிம்பத்தை கட்டமைத்து உள்ளது. பெண் என்ற நிலையில் இழப்பின் வேதனையைப் பொருட்படுத்தாமல் சமுதாயத்திற்காக வாழ்கிற பெண்தான் மூதின் மகளிர் என்ற நிலையினை எட்டமுடியும் என்பதை பெண்களுக்குக் கற்பித்துள்ளது (Palanisamy, 1989).

முடிவுரை

இல்வாழ்க்கையை மேற்கொண்ட மகளிர் நாணம் கற்பு போன்ற பண்புகளில் சிறப்பெய்தி விளங்கினர். மனைவியின் அரிய பண்புகளே கணவனுக்குப் பெருஞ் சிறப்பை தந்தன. மகளிர், நாட்டின்

பற்றுக் காரணமாக வீர உணர்வுடன் திகழ்ந்தனர். கணவனை இழந்த பெண்டிர் கணவன்பால் கொண்டிருந்த பேரன்பினால், தாமே விரும்பிக் கைம்மை நோன்பு மேற்கொண்டனர். ஆடவரைப் போலப் பெண்டிரும் கல்வியிற் சிறப்பெய்திப் பெரும்புலமை உடையவர்களாக விளங்கினர். மேற்கண்ட அக்காலப் பெண்டிர் பெரும்பான்மையோர் தமக்குரிய தகுதிகளும் கல்விப் பின்னணியும். இயைந்தமைந்து பண்பாடு உடையவர்களாக விளங்கினர். இதுவரைக் கண்டவற்றால், பெண்கள் தன் மகன் வீரமுள்ளவனாக இருக்க வேண்டும். பகைவர்களோடு போர் செய்து நாட்டைக் காக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்புள்ளம் கொண்டவர்களாக இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இதனால் சங்ககாலப் பெண்களின் மறப்பண்பு நன்கு புலனாகிறது.

நம் நாட்டில் பெண்களுடைய வளர்ச்சியின் இலக்கைக் காட்டும் பாதையிலுள்ள படிகள் நீண்டுக் கொண்டே போகின்றன. கல்வி அறிவிலும், பொருளாதார நிலையிலும், தொழில்துறையிலும் பெண் மிகச்சிறந்த நிலையில் வளர்ந்து வருகின்றாள். எனினும் பெண் என்ற ஒட்டு மொத்த நிலையில் அவள் முழுமை காணாதவளாக இருக்கின்றாள். மனிதவள மேன்மைக்கும், ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் பெண்ணடிமைத்தனம் தடையாக இருக்கிறது. எனவே ஊறு விளைவிக்கும் அத்தடைக்கல்லை அகற்ற வேண்டும் அம்முயற்சியில் சரிநிகர் சமானமாக ஆணும் பெண்ணும் சேர்ந்து ஈடுபடவேண்டும என்பதே மனித சமுதாயத்தின் ஒட்டு மொத்த எதிர்பார்ப்பு ஆகும்.

References

Balasubramanian, K.V., (2004), Sanga ilakkiyam, New Century Book House, Chennai, India

Balasubramaniyam, K.V., (2011) Natrinai, Fourth Edition, New Century Book House, Chennai, India.

Palanisamy, S., (1989), Purananurutril Tamilar Panpadu, Vaani pathipaggam, Coimbatore, India.

Puliyur Kesigan, (2012a), Ulaga Pothumarai Thirukural, Sumathi Publications, Tiruchirappalli, India.

Puliyur Kesigan, (2012b) Kurunthogai, Third Edition, Saradha pathippagam, Chennai, India.

Funding: NIL
Acknowledgement: NIL
Conflict of Interest: NIL
About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License